செ.வெ.எண்: 60 நாள்: 27.09.2016

## பத்திரிகைச்செய்தி

## புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டம் 2016-17

தமிழ்நாடு அரசு கோழி வளர்ப்பத் திட்டத்தின்கீழ் 2016-17 ஆம் ஆண்டிற்கு கிராமங்கள் தோறும் வீட்டின் புறக்கடையில் கோழி வளர்ப்பதற்கு வறுமைக் கோட்டின்கீழ் (BPL) உள்ள அனைத்து வகுப்பைச் சார்ந்த 80 பயனாளிகளும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த 20 பயனாளிகளையும் தேர்வு செய்யப்பட வேண்டும்.

தேர்வு செய்யும் பயனாளிகள் வறுமைக் கோட்டின்கீழ் (BPL) உள்ள பெண்களையும் மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்ட சுய உதவிக்குழு உறுப்பினராகவும் இருக்கலாம்.

விதவைகள், ஆதரவற்றவர்கள், திருநங்கைகள் மற்றும் ஊனமுற்றோர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மாநில அரசு 50% மானியமும் மற்றும் மத்திய அரசு 50% மானியமும் ஆக 100% முழுவதுமாக அரசு மானியம் வழங்கப்படும். அவ்வாறு தேர்வு செய்யும் பயனாளிகளில் 1 பயனாளிக்கு 20 கோழிகள் 4 வார வயதில் வழங்கப்படும்.

கோழிக் கொட்டகை கூடாரம் வாங்குதவற்கு 1 பயனாளிக்கு ரூ.1500/- வழங்கப்படும்.

ஆகவே, தேர்வு செய்யும் பயனாளிகள் அவர்களுக்கு வழங்கப்படும் கோழிகளைக் கொண்டு கோழிக்குஞ்சுகளை இனவிருத்தி செய்து வாழ்வாதாரத்தை பெருக்கி கொள்ள இதன் வழி தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**